இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 44 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 06 – புதன்கிழமை 23 செப்டம்பர் 2026 – சென்னை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 44 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 06 - Wednesday 23 September 2026 - Chennai 10 Pages ₹ 5.00

## ஆதவ் அர்ஜூனாவின் கரங்கள் சுத்தமில்லாதவை!

# ஆதாரமற்ற மனுவை அபராதத்துடன் தள்ளுபடி செய்க!

### சென்னை உயர்நீதிமன்றத்தில்

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பதில் மனு!

**சென்னை, செப். 23 -**

**தனக்கு எதிராக அமைச்சர் ஆதவ் அர்ஜூனா ரூ.1 கோடி மான நஷ்டஈடு கோரி தாக்கல் செய்த வழக்கை அபராதத்துடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கழக தலைவர் - முன்னாள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் நேற்று பதில் மனு தாக்கல் செய்துள்ளார்.**

போதைப் பொருள் கடத்தல் சம்பவத்தில் தொடர்புடைய ஜான் பிரிட்டோ, அமைச்சர் ஆதவ் அர்ஜூனாவின் உறவினர் எனக் கூறி அமலாக்கத்துறை வெளியிட்ட அறிக்கையை சுட்டிக்காட்டி, 258 கோடி ரூபாய் போதைப்பொருள் கடத்தல் வழக்கில் மூளையாக செயல்பட்ட ஜான் பிரிட்டோ, தமிழக பொதுப் பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜூனாவின் உறவினர் என்ற உண்மை அம்பலமாகியுள்ளதாக செய்திகள் வெளியாகி இருந்தன.

ஆனால், அமலாக்கத்துறை குறிப்பிட்டிருந்த ஜான் பிரிட்டோ, தனது உறவினர் அல்ல எனக் கூறி, ஒரு கோடி ரூபாய் மான நஷ்டஈடு கோரி, முன்னாள் முதலவர் மு.க.ஸ்டாலினுக்கு எதிராக அமைச்சர் ஆதவ் அர்ஜூனா சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கில் பதிலளிக்க மு.க.ஸ்டாலின் மற்றும் தி.மு.க. ஐ.டி. விங்குக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு நீதிபதி கோவிந்தராஜன், திலகவதி முன் விசாரணைக்கு வந்தபோது, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனுவில் கூறப்பட்டுள்ளதாவது :-

ஆதவ் அர்ஜூனாவின் மாமனார், மாமியார், மாமியாரின் சகோதரர் ஆகியோருக்கு எதிராக அமலாக்கத்துறை வழக்கு உள்ளது. ஆதவ் அர்ஜூனாவும் சி.பி.ஐ. வழக்கை எதிர்கொண்டிருக்கிறார். வில்லிவாக்கம் தொகுதியில் தாக்கல் செய்த வேட்பு மனுவில், கரூர் கூட்ட நெரிசலில்



ஏற்பட்ட உயிரிழப்பு சம்பவம் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணையை எதிர்கொண்டதாக ஆதவ் அர்ஜூனா கூறியிருக்கிறார்.

ஆனால், அதை எல்லாம் மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறார். சுத்தமான கரங்களால் அவர் நீதிமன்றத்தை அணுகாததால், எந்த நிவாரணமும் கோர உரிமையில்லை.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பாகவோ, அமைச்சர் ஆதவ் அர்ஜூனாவின் உறவினர் ஜான் பிரிட்டோவை தொடர்புபடுத்தியோ பதிவுகள் வெளியிடும்படி, ஐ.டி. விங்குக்கு ஒப்புதலோ, அறிவுறுத்தலோ வழங்கவில்லை. கட்சியின் பல்வேறு பிரிவுகள் சமூக வலைதளங்களில் பதிவிடப்படும் பதிவுகளுக்கு, தலைவர் என்பதற்காக தன்னை பொறுப்பாக்க முடியாது.

கட்சியின் தலைவர் என்ற முறையில் பல்வேறு அணிகளின் நிர்வாகிகள் மீது நிர்வாக ரீதியில் கட்டுப்பாடு உள்ளதே தவிர அந்த அணியின் உறுப்பினர்களின் தனிப்பட்ட செயல்களுக்கு தன்னை சட்டப்படியாக பொறுப்பாக்க முடியாது.

ஜான் பிரிட்டோ என்ற பெயரில் அமைச்சர் ஆதவ் அர்ஜூனாவுக்கு உறவினர் இருக்கிறார் என்பதையோ, அவர் மீது அமலாக்கத்துறை வழக்கு உள்ளது என்பதையோ, ஆதவ் அர்ஜூனா தனது மனுவில் மறுக்கவில்லை.

எனவே, வேண்டுமென்று உள்நோக்கத்துடன் பதிவுகளை வெளியிட்டதாக அமைச்சர் ஆதவ் அர்ஜூனா கூறும் குற்றச்சாட்டுகள் அடிப்படை ஆதாரமற்றவை. ஆதவ் அர்ஜூனா குடும்பத்தினர் பல்வேறு குற்ற வழக்குகளில் தொடர்புடையவர்களாக இருந்து வரும் நிலையில், அவரை அவமதித்ததாக கூறுவது வினோதமானது.

ஏற்கெனவே, தன்னைப் பற்றி தனிப்பட்ட முறையில் விமர்சித்து பேசிய ஆதவ் அர்ஜூனா, தற்போது மானநஷ்டஈடு கோர முடியாது. அவருடைய நன்மதிப்புக்கு களங்கம் ஏற்படுத்தியதாக கூறப்படும் குற்றச்சாட்டுக்கு எந்தவொரு ஆதாரத்தையும் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கு விசாரணைக்கு உகந்ததல்ல என்பதால், வழக்கை அபராதத்துடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

இவ்வாறு பதில் மனுவில் கூறப்பட்டுள்ளது.

## தமிழ்நாட்டில் வேகமாக பரவும் டெங்கு காய்ச்சல்!

*சென்னை, செப். 23 -*

*தமிழகம் முழுவதும் ஒரே நாளில் 71 பேருக்கு டெங்கு காய்ச்சல் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை தெரிவித்துள்ளது. இதுவரை 17,348 பேருக்கு டெங்கு பாதிப்பு ஏற்பட்டுள்ள நிலையில், சென்னையில் மட்டும் 11 பேருக்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*தற்போது கோடை வெயில் போல வெயில் கொளுத்தி வரும் நிலையில் திடீரென டெங்கு பாதிப்பு அதிகரித்துள்ளது. சுகாதாரத் துறையினரை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. தமிழக வெற்றிக் கழக அரசு முன்கூட்டியே டெங்கு ஒழிப்பு பணிகளை தொடங்கவில்லை. தற்போது பாதிப்பு அதிகரித்த பின்னர்தான் சுகாதார பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் கடந்த செப்டம்பர் 15ஆம் தேதியிலிருந்து தமிழகத்தில் அதிக அளவில் டெங்கு பாதிப்பு பரவி வருகிறது என்கின்றனர். 15ஆம் தேதி மட்டும் 133 பேருக்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்ட நிலையில் அடுத்த அடுத்த நாட்களில் ஏறக்குறைய 250 நபர்கள் ஒரே நாளில் பாதிப்புக்குள்ளாகி வந்தனர். அதிகபட்சமாக செப்டம்பர் 16ஆம் தேதி 283 பேருக்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டது.*

*இந்த நிலையில் தமிழ்நாட்டில் நேற்று ஒரே நாளில் 71 பேருக்கு டெங்கு காய்ச்சல் பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை தெரிவித்து இருக்கிறது. நேற்று முன்தினம் நிலவரப்படி 1777 பேருக்கு டெங்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்ட நிலையில் கூடுதலாக நேற்று 21 பேருக்கு பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.*

## “உட்காரக் கூட இடமில்லை” – எழும்பூர்

# மருத்துவமனையை முதல்வர் ஆய்வு செய்த லட்சணம் பாரீர்!

### நோயாளிகளின் உறவினர்கள் சரமாரி குற்றச்சாட்டு!

சென்னை, செப்.23 -

எழும்பூரில் உள்ள பழமையான மகப்பேறு மருத்துவமனையில் முதல்வர் விஜய் சமீபத்தில் ஆய்வு செய்திருந்தார். முதல்வரின் ஆய்வுக்குப் பிறகுமே அடிப்படை வசதிகள் முறையாகச் செய்து தரப்படவில்லை என மருத்துவமனையில் சிகிச்சைப் பெறுவோரின் உறவினர்கள் குற்றஞ்சாட்டு கின்றனர்.

சென்னை எழும்பூரின் பாந்தியான் ரோடில் இருக்கக் கூடிய மகப்பேறு மருத்துவமனை 1844 இல் கட்டப்பட்டது. சென்னை மட்டுமல்லாமல் சென்னையைச் சுற்றியிருக்கக்கூடிய மாவட்டங்களிலிருந்தும் ஏழை எளிய பெண்கள் இங்கே பிரசவத்துக்காக அனுமதிக்கப்படுகின்றனர். இந்த மருத்துவமனையில் அடிப்படை வசதிகள் முறையாக இல்லை எனச் சமூக வலைத்தளங்களில் தகவல் வெளியான நிலையில், முதல்வர் விஜய் இந்த மருத்துவமனைக்கு நேரில் சென்று ஆய்வு செய்திருந்தார். மகப்பேறுக்காக அனுமதிக்கப்பட்டிருந்தவர்களிடம் குறைகளையும் கேட்டிருந்தார்.

ஜூலை 8ஆம் தேதி முதல்வர் ஆய்வுக்குச் சென்ற நிலையில், இன்று அந்த மருத்துவமனைக்குச் சென்றிருந்தோம். பாந்தியன் ரோடில் உள்ள மருத்துவமனையின் நுழைவு வாயில் வழியே உள்ளே செல்லும் போதே அதிர்ச்சியாக இருந்தது. பேருந்து நிலையங்களிலும் ரயில் நிலையங்களிலும் விடுமுறை நாட்களில் கூட்டம் கூடி காத்திருப்பதைப் போல மருத்துவமனை வளாகத்தில் கூட்டம் காணப்பட்டது. நெருக்கியடித்துக் கொண்டு பேப்பர்களையும் போர்வைகளையும் விரித்து ஈ மொய்க்க மக்கள் தரையில் படுத்திருந்தனர். இன்னும் சிலர் அந்த நெரிசலுக்குள்ளும் கைக்குழந்தையோடு அமர்ந்திருந்தனர்.

அசௌகரியமான அந்த இடத்தில் காத்திருந்த மக்களிடம் பேச்சுக் கொடுத்தோம். ‘இந்த ஆஸ்பத்திரில சிகிச்சையெல்லாம் ஒழுங்கா கொடுக்குறாங்க. அதனாலதான் ஜனங்க எங்கெல்லாமோ இருந்து இங்க பிரசவத்துக்காக வராங்க. ஆனா, புள்ளத்தாச்சிங்க கூட துணைக்கு வர உறவினர்களுக்கு இங்கு தங்குறதுக்குச் சரியான வசதி இல்லை. என் மகளுக்குப் பிரசவம் பார்க்குறதுக்காக 8 நாள் இங்கு சேர்த்திருந்தேன். முதல் 4 நாள் கழிச்சுதான் அவளுக்கு குழந்தை பிறந்துச்சு. அந்த நாலு நாளும் எங்களை உள்ளே அனுமதிக்கல. குழந்தை பிறந்த பிறகுதான் உள்ள அனுமதிச்சாங்க. இதுல கூட எங்களுக்குச் சங்கடம் இல்லை. எங்க புள்ளைங்க பாதுகாப்பா இருந்தா போதும்.

ஆனால், ஆஸ்பத்திரி வளாகத்துல கூட எங்களுக்குத் தங்குறதுக்கு முறையான வசதி இல்லை. தகர தட்டி போட்டு ஒரு செட்டு மாதிரி போட்ருக்காங்க. அதுல ஒரு 50 பேர்தான் இருக்க முடியும். ஆனா,100, 200 பேர் அங்கு நெருக்கடிச்சு படுத்திருப்போம். கொசுக்கடி தாங்க முடியாது. குடிக்க தண்ணீர் வசதியும் ஒரு இடத்துல இருக்கும், ஒரு இடத்துல இருக்காது. மழை பெஞ்சா அந்தத் தகர தட்டி உள்ள கூட உட்கார முடியாது. இப்ப கூட பாருங்க இந்தத் தகர செட் உள்ள இடம் இல்லாம எத்தனை பேரு வெளியே வராண்டால படுத்திருக்காங்கனு. உள்ள எங்க புள்ளைங்களைச் சேர்த்திருக்கோம். அவங்களுக்கு ஏதாச்சு ஒரு அவசரம்னா நாங்கதான் கூட இருந்து பார்த்துக்கணும். ஆனால், நாங்க தங்குறதுக்கு ஒரு சுகாதாரமான இடம் இங்கு இல்லை.

குழந்தை பிறந்து 15 நாள் கழிச்சு பிறப்பு சான்றிதழுக்கு விண்ணப்பிக்க வர சொல்றாங்க. கைக்குழந்தையைத் தூக்கிக்கிட்டு வரோம். அப்பவும் நாங்க இந்தத் தகர செட்டுக்குள்ளேயும் வராண்டாவுலயும்தான் காத்துக் கிடக்க வேண்டியிருக்கு. குழந்தைகளைப் பாதுகாப்பா வச்சுக்கிட்டு உட்கார கூட இடமில்ல. கைக்குழந்தைகளுக்கு எதுவும் கிருமி தொற்றிடுமோன்னு பயமா இருக்கு” என்கின்றனர்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு முதல்வர் இந்த மருத்துவமனையில் ஆய்வு செய்திருக்கிறார். சில தினங்களுக்கு மாநகராட்சி ஆணையர் மருத்துவமனையில் ஆய்வு செய்திருக்கிறார். ஆய்வுகள் தொடர்கின்றன. மக்களை அவதிப்படுத்தும் பிரச்சினைகள் தீரவில்லையே!

## மீனவர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுவார்கள்!

# பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் அமைக்கக்கூடாது!

### சென்னை உயர்நீதிமன்றத்தில் முன்னாள் எம்.எல்.ஏ. மயிலை த.வேலு வழக்கு!

*சென்னை, செப். 23 -*

*சென்னை பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைப்பதற்கு எதிராக தி.மு.க. தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.*

*சென்னையில் ரூ. 1,200 கோடி மதிப்பீட்டில் புதிய தலைமைச் செயலகம் கட்டப்படும் என்று முதல்வர் விஜய் சட்டப்பேரவையில் அறிவித்திருந்தார். பல்வேறு இடங்களில் ஆய்வு செய்யப்பட்ட நிலையில், பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் கட்டப்படும் என அரசாணையும் வெளியிடப்பட்டிருந்தது. பட்டின்பாக்கத்தில் தலைமைச் செயலகம் அமைக்க 9 மீனவ கிராமங்களைச் சேர்ந்த மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.*

*பாதிக்கப்படும் மீனவர்கள் இப்பகுதியில் தலைமைச் செயலகம்*



*அமைக்கப்பட்டால், அங்கு பல தலைமுறைகளாக வசித்து வரும் மீனவ மக்களின் பூர்விக குடியிருப்பு உரிமை மற்றும் வாழ்வாதாரமும் பாதிக்கப்படும் என கூறப்பட்டது.*

*இதனால், கடலில் மீன்பிடிப்பது, படகுகளை நிறுத்துவது, வலை பின்னுதல், மீன்களை உலர்த்துதல், விற்பனை செய்தல் உள்ளிட்ட தொழில்கள் பாதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.*

*இதுமட்டுமல்லாமல் பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைக்கப்பட்டால் அப்பகுதியில் மிகப்பெரிய அளவில் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்றும் பலரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். ஏற்கனவே, அப்பகுதியில் சாந்தோம் தேவாலயம், பள்ளிகள், அரசு அலுவலகம் உள்ளிட்டவை இருப்பதால் இப்பகுதியில் ஏராளமான மக்கள் கூடுவதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது.*

*இந்நிலையில், புதிய தலைமைச் செயலகமும் அமைக்கப்பட்டால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்றும் கூறி பலரும் எதிப்புத் தெரிவித்து வருகின்றனர்.*

*இந்நிலையில், பட்டினப்பாக்கத்தில் புதிய தலைமைச் செயலகம் அமைப்பதற்கு எதிராக தி.மு.க. முன்னாள் எம்.எல்.ஏ. மயிலை த.வேலு சார்பில் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த மனுவில், அரசு பிறப்பித்துள்ள அரசாணையை ரத்து செய்ய வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.*

*மேலும், போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதியில் தலைமைச் செயலகம் அமைப்பதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், பட்டினப்பாக்கத்தைத் தேர்வு செய்ததற்கான காரணம் அரசாணையில் குறிப்பிடப்படவில்லை என்றும், பட்டினப்பாக்கத்தில் தலைமைச் செயலகம் அமைத்தால் மீனவர்கள் கடுமையாக பாதிக்கப்படுவார்கள் என்றும் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*